**ஜனவரி – 07**

# TNPSC துளிகள்

- இந்திய ரயில்வேயானது அனைத்து நீண்ட தூர இரயில் வண்டிகளிலும், நீண்ட கால நீடிப்புத் தன்மையை அல்லது குறைவான நொறுங்கும் தன்மையை ஏற்படுத்திட பழைய மரபுசார் இரயில் பெட்டிகளுக்குப் பதிலாக புதிய வடிவமைப்பிலான LHB (Linke Hofmann Busch) பெட்டிகளை மாற்றிட திட்டமிட்டுள்ளது.
- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகமானது மனநல மருத்துவரான டாக்டர் ஜிதேந்திர நாக்பால் தலைமையில் ஜவஹர் நவோதயா வித்யாலயாவின் விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களின் தற்கொலை மரணங்களுக்கான சூழல்களை ஆராய்வதற்காக ஒரு சிறப்புக் குழுவை ஏற்படுத்தியிருக்கின்றது.
- அமெரிக்க பாதுகாப்புத் துறையின் ஊழியர்கள் பிரிவின் தலைமை அலுவலரான கெவின் ஸ்வீனி சமீபத்தில் தனது பதவியினை ராஜினாமா செய்திருக்கின்றார்.
- ஹைதராபாத்தில் உள்ள செகந்திராபாத் இரயில்வே நிலையம் தெற்கு மத்திய இரயில்வே மண்டலத்தின் முதல் இரயில் நிலையமாக 100 அடி உயரமுடைய கொடிக் கம்பத்தில் மூவர்ணக் கொடியை ஏற்றிய நிலையமாகியிருக்கின்றது. இது இரயில்வே வாரியத்தின் ஆணையப்படி செய்யப்பட்டிருக்கின்றது.

# தேசியச் செய்திகள்

## தேசிய சுகாதார நிறுவன மறுகட்டமைப்பு

- மத்திய அமைச்சரவையானது ஏற்கெனவே உள்ள தேசிய சுகாதார நிறுவனத்தை தேசிய சுகாதார ஆணையமாக மாற்றுவதற்கு ஒப்புதல் அளித்திருக்கின்றது.
- இந்த மாற்றமானது பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யாத் திட்டத்தினை சிறந்த முறையில் அமல்படுத்திட எடுக்கப்பட்டு இருக்கின்றது.
- தேசிய சுகாதார ஆணையம் முழு தன்னாட்சி பெற்றதாகவும் பொறுப்புடையதாகவும் அதிகாரம் கொண்டதாக மாற்றப்படும்.

## புது டெல்லி சர்வதேச நடுவர் தீர்ப்பாய மைய மசோதா

- மக்களவை சமீபத்தில் புதுடெல்லி சர்வதேச நடுவர் தீர்ப்பாய மைய மசோதாவை நிறைவேற்றியிருக்கின்றது.
- இது இந்தியாவை ஒரு சமரசப் பேச்சுவார்த்தைக்கான மையமாக மாற்றும் நோக்கில் புதுதில்லியில் ஒரு மறுசீரமைக்கப்பட்ட சர்வதேச நடுவர் தீர்ப்பாய மையத்தை ஏற்படுத்திட எண்ணுகிறது.
- இந்த மசோதாவானது,
    - ஒரு நிறுவனமாக்கப்பட்ட சமரசப் பேச்சு வார்த்தை மையத்திற்காக ஒரு தனிச் சுதந்திரமுடைய மற்றும் தன்னாட்சி பெற்ற முறையை ஏற்படுத்தவும்,
    - மாற்றுவகை தீர்வுகளுக்கான சர்வதேச மையத்தின் உடைமைகளை கைப்பற்றி இடம் மாற்றிடவும் எண்ணுகின்றது.

- புதுதில்லியின் சர்வதேச நடுவர் தீர்ப்பாய மையம் நீதிபதி B.N. ஸ்ரீ கிருஷ்ணா குழுவின் பரிந்துரையின் பேரில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- இந்த மையத்தின் பதவி சார்பான தலைவர் இந்தியாவின் தலைமை நீதிபதி ஆவார்.

### தேசிய தொழில் முனைவோர் விருதுகள் 2018

- புது டெல்லியில் நடைபெற்ற விழாவில் 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய தொழில் முனைவோர் விருதுகள் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தால் வழங்கப்பட்டன.
- 30 இளம் தொழில் முனைவோர்கள் மற்றும் 3 தொழில்முனைவோருக்கான சூழலைக் கட்டமைப்போர் என மொத்தம் 33 நபர்கள் விருது வழங்கப்பட்டனர்.
- முதல் தலைமுறை இளம் தொழில்முனைவோர் மற்றும் தொழில்முனைவோருக்கான சூழலைக் கட்டமைக்கும் பங்களிப்பாளர்கள் ஆகியோரை சிறந்த முறையில் அங்கீகரிப்பதும் கௌரவிப்பதும் இதன் நோக்கமாகும்.
- 2016 ஆம் ஆண்டில் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தால் இந்த விருது உருவாக்கப்பட்டது.

## சர்வதேசச் செய்திகள்

### பணச் சலவை தடுப்பு மசோதா - ஈரான் ஒப்புதல்

- சமயோசிதக் குழு என்று அறியப்படும் ஈரானியக் குழு வியாபாரத்தை எளிமையாக்கிட பணச் சலவைத் தடுப்பு மசோதாவினை நிறைவேற்றி இருக்கின்றது.
- இது நிதிநிலை செயல்பாட்டுப் பணியின் தரநிலைகளோடு ஒத்துப் போகும் வகையில் இருக்கும்.
- இது அமெரிக்கத் தடைகளின் பார்வையில் வெளிநாட்டு வர்த்தகத்தை எளிமையாக்கிடவும், ஈரானை சர்வதேச விதிமுறைகளோடு பொருந்திப் போகும் வகையில் மாற்றிடவும் எண்ணும் வகையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களுக்கான ஒரு மிகப்பெரிய நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.
- நிதிநிலை செயல்பாட்டுப் பணி என்பது பணச் சலவைக்கும் தீவிரவாத நிதியளிப்பிற்கும் எதிராக போரிடுவதில் முக்கியத்துவம் அளிக்கின்ற நாடுகளுக்கிடையேயான ஒரு அமைப்பாகும்.
- இந்த அமைப்பின் தடைப் பட்டியலில் வடகொரியாவுடன் சேர்ந்து ஈரான் மட்டுமே இருக்கின்றது.

## பொருளாதாரச் செய்திகள்

### பொருளாதாரக் குற்றமிழைத்துத் தப்பியோடியவராக விஜய் மல்லையா அறிவிப்பு

- மும்பையில் பணச் சலவையைத் தடுப்பதற்கான நீதிமன்றமானது விஜய்

மல்லையாவைப் பொருளாதாரக் குற்றமிழைத்துத் தப்பியோடியவராக அறிவித்து இருக்கின்றது.

- 2018 ஆம் ஆண்டின் புதிய பொருளாதாரக் குற்றமிழைத்துத் தப்பியோடியவர் சட்டத்தின்படி குற்றம் சாட்டப்பட்ட முதலாவது தொழிலதிபர் விஜய் மல்லையா ஆவார்.
- இவ்வாறு அறிவிக்கப்பட்ட நபர் 2018 ஆம் ஆண்டின் பொருளாதாரக் குற்றமிழைத்துத் தப்பியோடியவர் சட்டத்தின்படி இவ்வாறு அறிவிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் உயர் நீதிமன்றத்தில் அந்த அறிவிப்பின் மீது வழக்கு தொடுக்கலாம்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மண்டல் அணை திட்டம்


- வடக்கு கோயல் ஆற்றின் மீது மண்டல் அணை திட்டத்திற்காக பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- இந்த திட்டத்தின் கட்டுமானப் பணியானது, 1972 முதல் 1993 வரை நடைபெற்றது.
- பின்னர் பீகார் வனத்துறையினரால் எழுப்பப்பட்ட சில விவகாரங்களால் இது நிறுத்தப்பட்டது.




- இந்த திட்டமானது பலமு புலிகள் காப்பகம் மற்றும் பெட்லா தேசியப் பூங்கா ஆகியவற்றின் பகுதிகளை மூழ்கடிக்கக் கூடிய அபாயத்தினையுடையது.
- வடக்கு கோயல் ஆறானது ஜார்க்கண்ட் மாநிலத்தின் ராஞ்சி பீடபூமியிலிருந்து உருவாகிறது.
- இது பீகாரில் கங்கை நதியுடன் இணையும் சோன் ஆற்றின் துணை நதியாகும்.

### பபூக் சூறாவளி

- பபூக் புயலானது குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி போர்ட் பிளேர் போன்ற வளைகுடாத் தீவுகளில் நிலச்சரிவுகளை ஏற்படுத்தியுள்ளது என இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.




- பபூக் ஆனது தாய்லாந்து விரிகுடா மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் முப்பது ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் வானிலை அமைப்பாகும்.

## மாநிலச் செய்திகள்

### போலாவரம் திட்டத்திற்கான CBIP விருது

- ஆந்திரப் பிரதேசமானது CBIPயின் (Central Board of Irrigation & Power) சிறந்த நீர்வள ஆதாரத் திட்ட செயலாக்க விருதினைப் பெற்றது.




- இந்த விருதானது கோதாவரி ஆற்றின் மீது போலாவரம் பல்நோக்குத் திட்டத்தின் சிறந்த திட்டமிடல், அமலாக்கம், கண்காணிப்பு மற்றும் விரைவான செயலாக்கம் ஆகியவற்றிற்காக வழங்கப்பட்டுள்ளது.

### அடல் சோலார் க்ருஷி பம்ப் திட்டம்

- மின்சாரக் கட்டணம் செலுத்தாமையால் ஏற்படும் இழப்புகளைக் குறைக்கவும் சூரிய சக்தியை ஊக்குவிக்கவும் மகாராஷ்டிரா அரசானது அடல் சோலார் க்ருஷி பம்ப் திட்டம் என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த திட்டத்தின் சிறப்பம்சங்களில் ஒன்று
    - அரசானது விவசாயிகளுக்கு மானிய விலையில் சூரிய ஒளியால் இயங்கும் தண்ணீர் இறைப்பானை வழங்குவதாகும்.
- மேலும் அரசானது இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு இரண்டு LED விளக்குகள், DC காற்றாடி மற்றும் கைபேசி சார்ஜர் ஆகியவற்றை இலவசமாக வழங்கவும் முடிவு செய்துள்ளது.

## விளையாட்டுச் செய்திகள்

### ஹோப்மன் கோப்பை

- எட்டு அணிகள் கலந்து கொள்ளும் உள்ளரங்கு கடினத் தரை ஹோப்மென் கோப்பை டென்னீஸ் போட்டித் தொடரானது மேற்கு ஆஸ்திரேலியாவின் பெர்த்தில் நடத்தப் பட்டது.
- இந்த ஆண்டு சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் மற்றும் பெலிந்தா பென்சிக் ஆகியோர் ஜெர்மனியின் ஏஞ்சலிக் கெர்பர் மற்றும் அலெக்ஸாண்டர் கீரெப் ஆகியோரை வென்று தொடர்ந்து 2-வது முறையாக ஹோப்மேன் கோப்பையை வென்றனர்.



- இது சுவிட்சர்லாந்தின் 4-வது பட்டமாகும். இது 6 பட்டங்களை வென்ற அமெரிக்காவை விட ஒரு இடம் மட்டுமே பின்னர் உள்ளது.
- இந்த வருட போட்டித் தொடரானது ஹாப்மேன் கோப்பையின் 31-வது பதிப்பாகும்.

மேலும் அடுத்த ஆண்டு முதல் ATP போட்டித் தொடராக இது மாற்றப்பட இருப்பதால் இது இறுதி பதிப்பாகவும் உள்ளது.

# இதரச் செய்திகள்

## தினு ரன்தீவிற்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

- மூத்த ஊடகவியலாளரான தினு ரன்தீவிற்கு அவரின் வாழ்நாள் முழுவதுமான பத்திரிக்கைகளுக்கான பங்களிப்பிற்காக வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது. இவர் 1956 ஆம் ஆண்டு தனது பத்திரிக்கையாளர் பணியைத் தொடங்கினார்.
- இந்த விருதானது மகாராஷ்டிரா சட்டசபை மற்றும் செயலகம் ஆகியவற்றில் பணிபுரியும் பத்திரிக்கையாளர்களின் சங்கமான மந்திராலயா மற்றும் விதிமண்டல் வார்த்தகார் சங்கம் என்ற அமைப்பால் வழங்கப்பட்டது.

- - - - - - - - - - - - - - -